**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.374/2022**

2026ம் ஆண்டு ஜீன் மாதம் 10–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.Dr.V.ஸ்ரீவித்யா, தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் –திரு.கருப்பசாமி பாண்டியன் **PW–7** தொழில்–

த/க பெயர் – வயது –

அலைபேசி – முகவரி –

**(எதிரி ஆஜர் )**

__**முதல் விசாரணை**__:–

1) நான் தற்போது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் ஏற்கனவே இருந்த விசாரணை அதிகாரியான திரு.வெள்ளியங்கிரி அவர்கள் காலமாகிவிட்டார் என்பதால் இந்த வழக்கின் கோப்பு அவருக்கு பின்னிட்டு விசாரணை அதிகாரியான திரு.வளவன் என்பவர் வசம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டது. திரு வெள்ளிங்கிரி என்பவர் விசாரணை மேற்கண்ட போது அவர் சாட்சிகள் குருசாமி, மாரியம்மாள், குமாரசாமி, சின்னசாமி, கே.என் வெங்கடாசலபதி, பூபதி, ஜெயதேவி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். அவருக்கு பின்னிட்டு விசாரணை அதிகாரியான திரு வளவன் என்பவர் சாட்சிகளை விசாரித்து மேல் விசாரணை செய்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 419, 467, 468,

Dr.V.Sree Vidya Date: 2026.06.10 17:36:33 +0530

471 உடன் இணைந்த 109 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

2) கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிப்பதால் இந்நீதிமன்ற கோப்புகளை பார்த்து ஏற்கனவே சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டன, அவை முறையே இந்த வழக்கில் ஆவணப்படுத்தப்பட்டன. 06.04.2006 ஆம் தேதி அன்று இந்த வழக்கு எதிரிகளான சின்னப்ப கவுண்டர், பச்சமுத்து, அங்கமுத்து என்ற தங்கராஜ், ஏ.என் குருசாமி, சேமலைக்கவுண்டர் ஆகியோர் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1) கடந்த 15.03.2026 ஆம் தேதி அன்று நான் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் பணிக்கு சேர்ந்தேன். இதற்கு முன்பு வேறு எந்த காலகட்டத்திலும் நான் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் பணிபுரியவில்லை. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான வெள்ளியங்கிரி என்பவர் சிறப்பு உதவி ஆய்வாளர் என்று சொன்னால் முதல் தகவல் அறிக்கையின் படி உதவி ஆய்வாளர் என்று தான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது, குற்ற அறிக்கையில் வெள்ளியங்கிரி சிறப்பு உதவி ஆய்வாளராக குறிப்பிடப்பட்டு இருக்கிறாரா என்று கேட்டால் குற்ற அறிக்கையில் அப்படித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததில் ஒவ்வொரு இடத்திலும்

Dr.V.Sree Vidya Date: 2026.06.10 17:36:44 +0530

சிறப்பு உதவி ஆய்வாளர் என்று தான் குறிப்பிட்டிருக்கிறார் என்றும் சொன்னால் சாட்சி பார்த்துவிட்டு ஆமாம் என்று கூறுகிறார்.

2) எம்.எஸ்.எம். வளவன் என்ற காவல் அதிகாரி தற்போது பணியில் தான் இருக்கிறாரா என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. சாட்சிகளின் பட்டியலில் காவல் ஆய்வாளர் என்ற எழுத்து அடிக்கப்பட்டு அதற்கு கீழ் சிறப்பு உதவி ஆய்வாளர் என்று எஸ்.எஸ்.ஐ என்று குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். குற்ற அறிக்கை படிவத்தின் 2ம் பக்கத்தில் வெள்ளியங்கிரி என்று கையெழுத்திட்டிருந்தபோதிலும் காவல் ஆய்வாளர் என்ற முத்திரை காணப்படுகிறது ஆனால் அதற்கு முன்பு உதவி என்று மட்டும் எழுதப்பட்டிருந்தது.

3) கையொப்பம் இட்டுவிட்டு எஸ்.எஸ்.ஐ என்ற குறிப்பு கையெழுத்தில் காணப்படுகிறது என்றால் அது எனக்கு தெரியவில்லை. ஒரு சிறப்பு உதவி ஆய்வாளர் இது போன்ற குற்ற வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று அரசாணை இருக்கிறது என்று சொன்னால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. பொதுவாக ஒரு காவல் அதிகாரியானவர் வெளிமாநிலங்களுக்கு விசாரணைக்கு செல்ல வேண்டுமென்றால் அவர் மாவட்ட கண்காணிப்பாளரிடம் சிறப்பு அனுமதி பெற்று தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான். விசாரணை அதிகாரி ஜெயதேவி என்பவரை

Dr.V.Sree Vidya Date: 2026.06.10 17:36:53 +0530

பெங்களூரில் சென்று விசாரித்தார் என்று சொன்னால் கோப்புகளில் அப்படி எதுவும் தெரியவில்லை மேலும் அவர் பெங்களூருக்கு சென்று விசாரித்ததற்கு அனுமதி ஏதும் காவல் கண்காணிப்பாளரிடம் வாங்கி இருக்கிறாரா என்ற விவரமும் கோப்புகளில் இல்லை என்று சொன்னால் ஆமாம். அப்படி பெங்களூருக்கு சென்று விசாரணை செய்திருந்தால் அதற்கான போக்குவரத்து செலவு விசாரணை அதிகாரி வாங்கி இருக்கிறாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கோப்புகளில் இருக்கிறதா என்று கேட்டால் இல்லை.

4) விசாரணை அதிகாரி ஜெயதேவியின் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் சான்றிட்ட நகல் பெற்று அதனை தாக்கல் செய்திருக்கிறார் என்று சொல்லி இருந்தபோதிலும் எந்த தேதியில் அந்த சான்றிட்ட நகலை வாங்கினார் என்றோ அதனை எப்போது தாக்கல் செய்தார் என்ற விவரங்கள் எதுவும் கோப்புகளில் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஜெயதேவி என்பவர் கைரேகை நிபுணரே கிடையாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. அவர் ஒரு வழக்கறிஞர் மட்டுமே என்றும் சொன்னால் எனக்கு தெரியாது அவருடைய சான்றிதழ்களை நான் பார்த்தது கிடையாது. அ.சா.ஆ.4 ஆவணத்தில் அவருடைய லெட்டர் ஹெட்டில் அவருடைய தகுதிகள் சொல்லப்பட்டு இருக்கிறது அவ்வளவுதான்.

Dr.V.Sree Vidya Date: 2026.06.10 17:37:01 +0530

5) இந்திய அரசாங்கத்தால் 23.09.1978 - க்கு பின்னால் ஒரு கைரேகை நிபுணராக யார் யார் இருக்கலாம் என்று அரசாணை இருக்கும் போது அந்த அரசாணையின்படி இருப்பவர்கள் மட்டுமே கைரேகைத்துவம் பெற்றவர்களாக கருதப்பட வேண்டும் என்று சொன்னால் சரிதான். அந்த அரசாணையின்படி ஜெயதேவி எந்த தகுதியும் பெறவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது.

6) அ.சா.ஆ.4 சான்றிட்ட நகல் என்றால் ஆமாம். அ.சா.ஆ.8 ஒரு ஜெராக்ஸ் நகல் என்றும் சொன்னால் சரிதான், அதன் அசல் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். வெறும் ஜெராக்ஸ் நகல்களை வைத்து எந்தவிதமான தீர்க்கமான முடிவிற்கும் வர முடியாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. ஜெயதேவி என்பவர் ஒரு தகுதி பெற்ற ஒரு கைரேகை நிபுணர் கிடையாது என்பதால் அவர் கொடுத்ததாக சொல்லப்பட்ட கருத்துரையின் பெயரில் எந்தவிதமான தீர்க்கமான முடிவும் எட்ட இயலாது என்று சொன்னால் தெரியாது.

7) இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் என்று சொல்லப்படும் குருசாமி உண்மையில் பாதிக்கப்பட்ட நபரே கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு இந்த வழக்கினை தாக்கல் செய்ய எந்தவித முகாந்திரமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் கோப்புகளின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் அளித்து இருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் நேரடியாக இந்த வழக்கின் விசாரணை

Dr.V.Sree Vidya Date: 2026.06.10 17:37:10 +0530

அதிகாரி அல்ல என்று சொன்னால் சரிதான்.

8) சுசிலா தாக்கல் செய்திருந்த வழக்கான CC.No.373/2022 வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றது என்று சொன்னால் இருக்கலாம் அந்த ஆவணங்களை இந்த வழக்கின் விசாரணை அதிகாரியான வெள்ளியங்கிரி பரிசீலித்தாரா இல்லையா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் குருசாமியின் தனிப்பட்ட அடையாளங்களை காட்டும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அப்படி ஏதும் இல்லை. புகார்தாரரின் தந்தை பெயர் குருசாமியே அல்ல என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரான குருசாமி பாதிக்கப்பட்ட நபரே கிடையாது என்றும் அதாவது அவருக்கு தனிவழக்கு தாக்கல் செய்யும் அவசியமும் முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஒரு சிறப்பு உதவி ஆய்வாளரால் விசாரணை அதிகாரியாக நடந்து கொண்டு குற்ற அறிக்கை தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு எந்தவிதமான இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் அதிகாரம் இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

Dr.V.Sree Vidya Date: 2026.06.10 17:37:22 +0530

Chief Judicial Magistrate,
Erode.